<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 52/2022** நாள்: **18.09.2025** ம.சா.**1** – பெரியசாமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **2**ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன். நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன். நான் வழக்கறிஞர் உதவியாளராக வேலை பார்ப்பதற்கு சங்கத்தில் பதிவு எதுவும் செய்யவில்லை. விபத்தில் இறந்த போனது எனது மகன். எனது மகன் இறக்கும்போது வயது 35. எனது மகனின் பிறந்த தேதி 10.11.1982 ஆகும். விபத்து சமயத்தில் எனது மகனுக்கு 37 வயது என்றும் நான் இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் 35 வயது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகனுக்கு திருமணமாகவில்லை. விபத்து சமயத்தில் கயிர் தயாரிக்கும் நிறுவனம் நடத்தி வந்தார். அதாவது தென்னை மட்டையிலிருந்து நார் தயாரிக்கும் தொழிலை செய்து வந்தார். மேற்படி நிறுவனத்தை பொள்ளாச்சி தாலுகா, கரியான்செட்டி பாளையத்தில் நடத்தி வந்தார். மேற்படி தொழிலை எனது மகன் நடத்தி வந்தார் என்பதை காட்டுவதற்கு நான் உரிமத்தை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேன். கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்து அதில் தான் மேற்படி தொழிலை செய்து வநதார். எத்தனை வருடம் எனது மகன் மேற்படி தொழிலை செய்து வந்தார் என்றால் 2 முதல் 3 வருடங்கள் செய்து வந்தார். எனது மகன் வருமான வரி செலுத்தியுள்ளார். மேற்படி வருமான வரி சான்றிதழையும் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வருமான வரி சான்றிதழ் அவருடைய தனிப்பட்ட வருமான வரி சான்றிதழ் என்றால்

சரிதான். வருமானம் எனது மகனுக்கு வந்தது என்பதை காட்டுவதற்கு வங்கிகணக்கு பட்டியலை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தொழிலுக்காக எனது மகன் சிண்டிகேட் வங்கியில் கடன் வாங்கியுள்ளார். கடன் வாங்கினார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வங்கியில் கடன் வாங்குவதற்காக தான் வருமானத்தை மிகைபடுத்தி வருமான வரி சான்றிதழில் எனது மகன் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மகன் தொழிலில் யாரிடமிருந்து எவ்வளவு மூலப்பொருட்கள் வாங்கிய விவரத்தை இந்த மனு விசாரணையில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் தொழில் நடத்தினார் என்பதை காட்டுவதற்கு தொழில் வரி, மின் கட்டன ரசீது, வேலையாள் கூலி ரசீது ஆகியவற்றை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் 2019 லிருந்து வருமான வரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நிறுவனம் எதையும் எனது மகன் நடத்திவரவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் நிறுவனம் நடத்தி வந்தால் கட்டிட உரிமையாளரிடம் செய்து கொண்ட வாடகை ஒப்பந்தத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் மில்லில் இருந்து கரியான்செட்டிபாளையத்திற்கு சென்றுள்ளார். விபத்தினால் எனது மகனுக்கு கை, கால், அடிவயிறு ஆகியவற்றில் காயம். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை வளைவான சாலை என்றால் சரிதான். எனது மகன் விபத்து சமயத்தில் வேகமாக வந்த வளைவில் திரும்பும் போது எதிர்த்தார் போல் வந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று சாட்சி கூறுகிறார். எனது மகனுக்கு விபத்து

**சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அது மோட்டார் வாகன விதிக்கு விரோதமானது என்றும், எனவே நான் கோருகிற இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.